உடைப்பதற்காக உள்ள வெடிகுண்டாக இருந்தாலும் அஜாக்கிரதை யாக குழந்தைகள் கைக்கு எப்படி வந்தது? வெடிமருந்து பந்து உருவத்தில் இருக்குமா என்பதைப்பற்றி யெல்லாம் விபரங்கள் தற்போது சொல்ல இயலாவிட்டாலும் விபத்து ஏற்பட்டதற்குக் காரணமாக இருந்தவர்களைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நான், அது புலனாய்விலே இருப்பதாகச் சொல்லியிருக்கிறேன், மேற்கொண்டு விவரங்களைச் சொல்வதற்கு இயலாது.

(5) அமைச்சர் அறிக்கை—கண்ணங்குடி பஞ்சாயத்து ஒன்றிய ஆணையர் மீது சாட்டப்பட்ட லஞ்சப் புகார் குறித்து

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் அனுமதியோடு நான் இந்தப் பேரவைக்கு ஒரு அறிக்கையை அளிக்க விரும்புகிறேன். நேற்றைய தினம் கண்ணங்குடி பி.டி.ஓ. அவர்கள்மீது லஞ்சப் புகார் தெரிவித்து வந்த ஒரு தந்தியை டாக்டர் ஹாண்டே அவர்களும், திரு. பொன்னப்ப நாடார் அவர்களும் சுட்டிக் காட்டினார்கள். அதைப்பற்றிய விளக்கத்தைத் தெரிவிக்கிறேன்.

தேவகோட்டை டிவிஷனில் உள்ள கண்ணங்குடி பஞ்சாயத்து ஒன்றிய ஆணையர் (பி.டி.ஓ.) ஐ.எம்.எஸ். கடனை சாங்ஷன் செய்து பின் அதற்குரிய பெர்மிட்டைத் தருவதற்கு ரூ. 100க்கு 2 ரூபாய் லஞ்சம் கேட்டதாக நடகுடி வி. சுப்பையா அம்பலம் தந்தி கொடுத்திருப்பதாக நேற்று இங்கே தெரிவித்தார்கள். உடனடியாக தேவகோட்டை ஆர்.டி.ஓ. அவர்களை இதுபற்றி விசாரிக்குமாறு கேட்கப் பட்டது. நேற்று ஆர்.டி.ஓ. விசாரணை செய்ததில் இந்தப் புகார் ஆதாரமற்றது என்று கூறியுள்ளார். திரு. சுப்பையா அம்பலம் ரூ. 300க்கு ஐ.எம்.எஸ். கடன் கேட்டு விண்ணப்பம் செய்த தேதி 17—11—1972. கடன் சாங்ஷன் செய்த தேதி 25—11—1972. பெரிமிட் சுப்பையா அம்பலம் பெற்றுக்கொண்ட தேதி

27—11—1972. எனவே கடன் சாங்ஷன் செய்த இரண்டு நாட்களுக்குள் பெர்மிட் அவரிடம் நேரில் தரப்பட்டுள்ளது. திரு. சுப்பையா அம்பலமே கையெழுத்திட்டு பெர்மிட்டை 27—11—1972-ல் பெற்றுக் கொண்டுள்ளார் என்று ஆர்.டி.ஓ. கூறியுள்ளார். எனவே, அந்தப் புகாருக்கு ஆதாரம் இல்லை என்று ஆர்.டி.ஓ. தெரிவித்திருக்கிறார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(4) கவன ஈர்ப்பு—தொடர்ச்சி

(இ) "நவமணி" ஊழியர்களிடையே ஏற்பட்டுள்ள பதட்டநிலை குறித்து.

DR. H. V. HANDE: Sir, I wish to call the attention of the Hon. Minister for Labour to a matter of urgent public importance, namely, the feeling of insecurity, frustration and unrest prevailing among the employees of the Tamil evening daily "Nava Mani" at Madras.

* மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: சென்னை கூட்டுறவு அச்சக வெளியீட்டுச் சங்கம், நாளிதழ்கள், புத்தகங்கள், துண்டு வெளியீடுகள் முதலியவற்றை அச்சிட்டு வெளியிடும் பணியை மேற்கொள்வதன் வாயிலாகத் தமது உறுப்பினர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் நோக்குடன் 1959 ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகிறது. இச் சங்கம் "நவமணி" என்னும் தமிழ் நாளிதழ் ஒன்றை வெளியிட்டு வருகின்றது. 30—6—1972 அன்றுள்ளபடி இச் சங்கத்தில் 290 உறுப்பினர்கள் இருந்தனர்; இதற்கு அனுமதிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 84,675 ஆகும். இச் சங்கம் 93 உறுப்பினர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்துள்ளது.

சங்கத்தின் அலுவல்களை நிர்வகிக்கும் அதிகாரம் இயக்குநர்கள் குழுவிடம் இருக்கிறது. இக் குழுவில் 11 இயக்குநர்கள் உள்ளனர். இதில் எட்டுப் பேர் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்; இருவர் சென்னை மாவட்ட கூட்டுறவு மத்திய வங்கியினால் நியமிக்கப்பட்டவர்கள்; குழுவினால் நியமிக்கப்பட்ட ஆசிரியர்—உறுப்பினர் ஒருவர். சங்கத்தின் தலைவர் திரு. எஸ். வி. ஜி. சௌரிராஜுலு இந்த நாளிதழை அச்சிட்டு வெளியிடுபவர் ஆவார். இவர் பத்திரிக்கை ஆசிரியர்கள் குழுவின் தலைமை ஆசிரியராவார்.